**செ. கு. எண்**: 208 **நாள்**: 05.06.2012

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 5.6.2012**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடருக்கு சில நாட்களுக்கு முன்பு ரயில்வே சரக்குக் கட்டணங்களை 25 விழுக்காடு அளவுக்கு உயர்த்தி, 20,000 கோடி ரூபாய் அளவுக்கு மக்கள் மீது கூடுதல் சுமையை தி.மு.க. அங்கம் வகிக்கும் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு சுமத்தியது. இதன் மூலம், விலைவாசி உயர்விற்கும், பணவீக்கத்திற்கும், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்விற்கும் மத்திய அரசு வழி வகுத்தது.

இதன் தொடர்ச்சியாக, வரலாறு காணாத அளவில், பெட்ரோல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 7 ரூபாய் 50 காசு என உயர்த்தி, பின்னர் மக்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பின் காரணமாக, கண்துடைப்பு நடவடிக்கையாக 2 ரூபாயை மத்திய அரசு குறைத்தது.

இவற்றின் காரணமாக, தாங்கொணா சுமையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஏழை, எளிய, நடுத்தர மக்களை மீண்டும் துன்பத்தில் உள்ளாக்கும் வகையில், பயணக்கட்டுகள், அதாவது Luggage மற்றும் சிப்பங்கள், அதாவது Parcel கட்டணங்களை 25 விழுக்காடு அளவுக்கு தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு உயர்த்தியுள்ளது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அமைந்துள்ளது. இதற்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை, எளிய மக்கள் ரயில் பயணம் மேற்கொள்ளும் போது தங்கள் பார்சல்களையும் உடன் எடுத்துச் செல்வது வழக்கம் ஆகும். இதே போன்று, சிறு வியாபாரிகள் தங்கள் விற்பனைப் பொருட்களை ரயில்வே பார்சலில் அனுப்புவது வாடிக்கை. மேலும், டயர், செய்தித்தாள்கள், பத்திரிகைகள், மருந்து பொருட்கள், பருப்பு வகைகள் மற்றும் மாவுப் பொருட்கள் ஆகியவையும் பார்சல்கள் மூலம் ரயில்களில் கொண்டு செல்லப்படுகின்றன. எனவே, ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு பாதகமாக அமைந்துள்ள இந்த லக்கேஜ் மற்றும் பார்சல் கட்டண உயர்வுகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**